# 1. பூங்காவனம்

**அலகு அறிமுகம்**

**உ**லகம் தோன்றிய நாள் முதல் இயற்கை நமக்களித்து வரும் நன் கொடைகள் எண்ணிலடங்காதன. நம்மைச் சுற்றியுள்ள இயற்கை யழகைச் சங்க காலத்திலிருந்தே கவிஞர்கள் பாடிவந்திருக்கிறார்கள். வனங்கள் மனிதர்களின் வாழ்வில் நீங்கா இடம்பெற்றுள்ளன என்பதை உணர்த்துவதும் வனத்தின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்துவதும் இவ்வலகின் நோக்கமாகும். இந்நோக்கத்தை அடையும் வண்ணம் இப்பாடப்பகுதியும் செயல் பாடுகளும் அமைந்துள்ளன.

குயில்கள் கூவுவதும் மயில்கள் ஆடுவதும் இயற்கையே. இந்த இயற்கையை இரசிக்கும் வண்ணம் பாரதிதாசன் அவர்களின் இனிய சாரலின் எழில் என்னும் கவிதையை வாசிக்கவும் மொழிக் கூறுகளை அறியவும் முதலாம் துணைஅலகு வழிவகுக்கின்றது.

மரங்கள் மனிதனின் அன்றாட வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளன என்ற கருத்தை வலியுறுத்தும் மரமும் மனிதனும் என்ற கட்டுரை இரண் டாவது துணைஅலகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நம்முடன் வாழ்பவர்களுக்காகவும் நமக்குப் பின் வருபவர்களுக்காக வும் நம்மால் முடிந்த அளவு நாம் செய்யும் நன்மைகள்தான் நம் வாழ்க்கையை முழுமையடையச் செய்கின்றன என்ற செய்தி பிறருக் காகவும் வாழ் என்ற கதையின் வாயிலாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வலகிற்குப் பொருத்தமான செயல்பாடுகளைச் செய்வதன் மூலம் கவிதையை இரசிக்கவும், புதிய கவிதைப் படைப்பதற்கான திறனைப் பெறவும், கட்டுரை கதைகளின் தனித்தன்மையைப் புரிந்துகொள்ளவும் இயலும்.

மொழி அமைப்பை அறிவதற்கான சில இலக்கணப் பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
24 பிரிவேளைகள்

# பாடத்திட்ட வலைச் சட்டம்

| கருத்துகள்/ திறன்கள் மொழி வெளியீட்டு வடிவங்கள் | செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ➢ தெளிவான உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வுடன் இராகத்தில் பாடுதல்<br>➢ காடுகளை அழிப்பதால் மனித இனத்திற்குத் துன்பம் ஏற்படும்<br>➢ சுருக்கமான தெளிவான வாக்கியக் கூறுகள்<br>➢ மனதைக் கவரும் வகையில் படைப்புகள் தயாரித்தல்<br>➢ கதையின் கருத்து, உள்ளடக்கம் பாவனை உட்கொண்டு வாசிப்பைத் தொடங்குதல்<br>➢ மொழிநடை, தனித்தன்மைகளைக் கண்டுபிடித்தல்<br>➢ வாசித்த அனுபவங்கள், சிறந்த மொழிநடை, கருத்தின் அடிப்படையில் கவிதையை முழுமையாக்கல் | ➢ வாசித்தல் சொல்லுதல்<br>➢ மெட்டமைத்துப் பாடுதல்<br>➢ கலந்துரையாடுதல்<br>➢ ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுதல்<br>➢ படம் பார்த்துக் கதை கூறுதல்<br>➢ சுவரொட்டி முத்திரை வாக்கியம், துண்டுப்பிரசுரம் தயாரித்தல்.<br>➢ சொற்பொழிவுக் குறிப்பு தயாரித்தல்.<br>➢ அழைப்பிதழ் தயாரித்தல்<br>➢ கவிதையை முழுமையாக்கல் | ➢ கவிதையின் கருத்தை உட்கொண்டு பாடுகின்றனர், கலந்துரையாடுகின்றனர்.<br>➢ கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் காடுகள் அழிவதால் ஏற்படும் தீங்குகள் பற்றி விளக்கும் சுவரொட்டி, முத்திரை வாக்கியம், துண்டுப்பிரசுரம் போன்றவற்றை எழுதுகின்றனர்<br>➢ சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கின்றனர்.<br>➢ அழைப்பிதழ் தயாரிக்கின்றனர்.<br>➢ கவிதையை முழுமையாக்குகின்றனர். |

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- ☞ இராக, தாள, பாவத்தோடு மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- ☞ மரங்களினால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றிக் கலந்துரையாடுகிறார்கள்.
- ☞ ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வேறொரு மொழி வெளியீட்டு வடிவமாக மாற்றுகிறார்கள்.
- ☞ காடுகளை அழிப்பதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டி, துண்டுப்பிரசுரம், முத்திரை வாக்கியங்கள் தயாரிக்கிறார்கள்.
- ☞ சொற்பொழிவு குறிப்பு தயாரிக்கிறார்கள்.
- ☞ அழைப்பிதழ் தயாரிக்கிறார்கள்.
- ☞ கவிதையை முழுமையாக்குகிறார்கள்.

**கற்றல் துணைக்கருவிகள்**

- ➲ பாடநூல்
- ➲ வாழ்த்து அட்டைகள்
- ➲ வாழ்த்து எழுதிய சார்ட்
- ➲ இயற்கைக் காட்சிப் படங்கள்
- ➲ மரங்களின் படங்கள்
- ➲ கதை, கவிதை நூல்கள்



## ஆயத்தச் செயல்பாடு

பட்டாம் பூச்சி பட்டாம் பூச்சி
எங்கே போகிறாய்?
பூப்பூவாய் தேன் குடிக்க
நானும் போகிறேன்.
அழகுமயிலே அழகுமயிலே
எங்கே போகிறாய்?
தோகையை விரித்து
நானும் ஆடப்போகிறேன்.
கருங்குயிலே கருங்குயிலே
எங்கே போகிறாய் ?
கூ......கூ......என்று
நானும் கூவப் போகிறேன் ?
தென்றல் காற்றே தென்றல் காற்றே
எங்கே போகிறாய் ?
இனிமையான காற்றை
நானும் கொடுக்கப் போகிறேன்.

இந்தப் பாடலைப் பாடி மாணவர்களை உற்சாகப்படுத்த இதிலிருந்து சில கேள்விகள் கேட்கலாம்.

- தோகை விரித்தாடுவது யார்?
- மயில்கள் எங்கு அதிகமாகக் காணப்படுகின்றன?
- இனிமையான காற்று எவ்வாறு கிடைக்கிறது?

வனம், இயற்கை எனும் கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து அது வழியாகப் பாடப்பகுதிக்குள் நுழையலாம்.

## செயல்பாடுகள்

**வாசியுங்கள்; சொல்லுங்கள்**

- மாணவர்களைத் தனித் தனியாகப் பாடக் கூறுதல்.
- மாணவர்களைக் குழுவாகப் பாடக் கூறுதல்.
- பாடலை ஆசிரியர் இராகத்துடன் பாடிக் காட்டுதல்.
- குரல் ஏற்றத் தாழ்வுடன் தெளிவாகப் பாடிக் காட்டுதல்.

பாடலில் வரும் கருத்தைப் புரிந்துகொண்டார்களா என்று தெரிந்துகொள்ள இரண்டு குழுக்களாகப் பிரிந்து வினாப் போர் நடத்தக் கூறலாம். இவ்வாறு வாசிக்கவும், குரல் ஏற்றத்தாழ்வைப் புரிந்துகொள்ளவும் செய்யலாம்.

### மெட்டமைத்துப் பாடுங்கள்

மாணவர்கள் தனித்தனியாக மெட்டமைத்துப் பாடட்டும், குழுக்களாகவும் பாடட்டும். சிறந்த மெட்டைத் தேர்ந்தெடுத்து அதனை அனைவரும் ஒன்றாகப் பாடட்டும்

**கவிதையை வாசிக்கும்போது கவனிக்க வேண்டியவை**



- *தெளிவான உச்சரிப்பு*
- *குரல் ஏற்றத்தாழ்வு*
- *இராக, தாளம்*
- *மிதமான அங்க அசைவுகள்*



## மதிப்பீடு

இராகம், தாளம், பாவனை, மெட்டு இவற்றின் அடிப்படையில் ஆசிரியர் மாணவர் பாடியதை மதிப்பீடு செய்யலாம்.

### கலந்துரையாடல்

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து (அவர்களே தங்கள் குழுக்களுக்கு மரத்தின் பெயரைக் கொடுக்கலாம்) ஒரு குழு மரத்தினால் ஏற்படும் நன்மையைக் குறித்தும், அடுத்த குழு மரங்களை வெட்டுவதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் கலந்துரையாடட்டும்.

எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும் வண்ணம் குழுச்செயல்பாடு அமைய வேண்டும். பின்னர் ஆசிரியரின் கருத்தை உட்படுத்தி நோட்டுப் புத்தகத்தில் எழுதக் கூறலாம்.

தொடர்செயல்பாடாக மரங்களை வெட்டுவதால் ஏற்படும் நன்மை தீமைகளை மாணவர்கள் தனித்தனியாகக் கட்டுரை வடிவில் எழுதிப் படைப்புத் தொகுப்பில் (Port folio) வைக்கலாம்.

### ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுதல்

பாடலில் வரும் குயில் மயில் போன்ற ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதச் செய்யவும். மேலும் இயற்கையின் அழகைக் குறிப்பிடும் பாடல்களை நூலகத்திலிருந்து திரட்டி வாசிக்கக் கூறுங்கள். ஆசிரியர் இது போன்ற சில பாடல் களை நூலகத்திலிருந்து திரட்டிக் கொடுக்கலாம்.

### படம் பார்த்துக் கதை கூறுதல்

செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து ஒவ்வொரு மாணவனும் கூறும் கருத்தைக் கரும்பலகையில் எழுதவும்.

கரும்பலகையில் எழுதிய கருத்தின் அடிப்படையில் குழுக்களாக இருந்து கதை எழுதட்டும். ஒவ்வொரு குழுவும் கதையை வெளியிடட்டும். ஆசிரியர் தம்மிடம் உள்ள மாதிரிக் கதையை வகுப்பில் வெளியிடட்டும். பின்னர் மாணவர்கள் எழுதிய கதையை மேம்படுத்தச் சொல்லிக் கதையை மதிப்பிடலாம்.



#### மதிப்பீடு

- கதையின் தொடக்கம், முடிவு
- கருத்துகளின் கோர்வை
- சொல்லாட்சி

### சுவரொட்டி, முத்திரை வாக்கியம், துண்டுப் பிரசுரம்

வனங்களை அழிப்பதால் ஏற் படும் தீங்குகளைப் பற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்த மாணவர் களைச் சுவரொட்டி, முத்திரை வாக்கியம், துண்டுப் பிரசுரம் போன்றவற்றை எழுதச் செய்ய லாம். மாணவர்கள் கலந்துரை யாடி எழுதுவது நன்று. (ஆசிரியர் இதற்கான சூழலை உருவாக்கலாம். வனவிழா, உலக வனநாள் மார்ச் 21, வனமகோல் சவம் ஜூலை 1 முதல் 7 வரை, இயற்கை பாதுகாப்பு தினம் நவம்பர் 25 )

**சுவரொட்டி மாதிரி**

**இயற்கைப் பாதுகாப்பு**
**விழிப்புணர்வு முகாம்**

நாள் : 5.6.2014 வியாழக்கிழமை
நேரம் : காலை 11.00 மணி
இடம் : அரசு நடுநிலைப்பள்ளி,
வண்டிபெரியார். இடுக்கி மாவட்டம்.

சிறப்புரை : திரு. V.கோபிநாத்,
இயக்குநர், மாநில வனத்துறை, கேரளா.

அனைவரும் வருக! பயன் பெறுக!!

**கவனிக்க வேண்டியவை**



- *நிகழ்வின் பெயரைப் பெரிய எழுத்திலும் ஏனைய தகவல்களை நாள், இடம், நேரம் ஆகியவற்றை அடுத்த நிலையிலும் குறிப்பிடுதல் வேண்டும்.*
- *சுருக்கமான சொல்லமைப்பு*
- *கவனத்தைக் கவரும் வடிவமைப்பு*



## மதிப்பீடு

கருத்துகளைத் தெளிவாகவும் பிறர்கவனத்தை ஈர்க்ககூடியதாகவும், கவர்ச்சியானதாகவும் வெளியிடுதல் வேண்டும் இதனடிப்படையில் தரநிர்ணயம் செய்யுங்கள்

**முத்திரை வாக்கியங்கள்**

***மரங்களைக் காப்போம்***
***மழைதனைப் பெறுவோம்***

***மாசடைதலைத் தடுப்போம்***
***மனிதகுலம் காப்போம்***

ஒரு முக்கிய கருத்தைச் சுருக்கமாகப் பொருள் பொதிந்து வெளி யிடுவதே முத்திரை வாக்கியங்கள்

**துண்டுப் பிரசுரம்**

*அன்புடையீர்,*

மாவட்ட வனத்துறை கண்காணிப்பாளர் ஜூன் 5 சுற்றுச்சூழல் தினத்தன்று காலை 11.00 மணியளவில் பள்ளிக் கலையரங்கில் சுற்றுச்சூழல் தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்ற வருகிறார்.

அனைவரும் வருக! ஆதரவு தருக!

இப்படிக்கு
**செயலர்**
பள்ளி நிர்வாகக் குழு

**துண்டுப் பிரசுரம் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டியவை**



- *சொல்ல வந்த தகவலைத் தெளிவாகக் குறிப்பிடுதல்.*
- *சிறு சிறு பத்திகளாக எழுதுதல்.*
- *வாசிக்கத் தூண்டும் நடையில் தருதல்.*
- *அன்புடையீர், நண்பர்களே, உங்கள் கவனத்திற்கு இதுபோன்ற அழைப்புத் தொடர்களை முதலில் அமைத்துத் துவங்குதல்.*
- *வெளியிட்டவர் பெயர், முகவரி, மற்றும் தொடர்பு தகவல்களைப் பிரசுரத்தின் இறுதியில் கொடுக்கலாம்.*

### சொற்பொழிவுக் குறிப்பு தயாரித்தல்

நமது பள்ளியிலுள்ள பசுமை மன்றத்தின் ஆண்டுவிழா அடுத்த வாரம் நடைபெற வுள்ளது. பசுமை மன்றத்தின் உறுப்பினர்களான மாணவர்களே நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும். நிகழ்ச்சியில் மரம் வளர்த்தலை ஊக்குவிப்போம் என்ற தலைப் பில் சொற்பொழிவாற்ற வேண்டும். அதற்கான சொற்பொழிவுக் குறிப்புகள் தயாரிக்க வேண்டும்.

மரங்களின் நன்மை பற்றிக் கூறும் புத்தகங்களை நூலகத்திலிருந்து எடுத்து மாணவர்களுக்கு அளிக்கலாம். மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து புத்தகத்தை வாசித்து அதிலிருந்து குறிப்புகள் தயாரிக்கட்டும்.



## மதிப்பீடு

கீழ்க்காணும் தரநிர்ணயக் குறிப்புகள் மூலம் சொற்பொழிவுக் குறிப்பை மதிப்பீடு செய்யலாம்

- . எடுத்துக்கொண்ட தலைப்பைத் தெளிவாகவும் முழுமையாகவும் கூறும் தன்மை
- பொருத்தமான உச்சரிப்பும் உணர்ச்சியும் வெளிப்படுதல்
- ஒப்பிடும் தன் கருத்தை நிறுவுதலும், கவர்ச்சிகரமான முடிவு வரும் வண்ணம் சொற்பொழிவாற்றுதலும்
- சிறந்த மேற்கோள்கள்
- கருத்துக்கோர்வை

தொடர் செயல்பாடாகப் பள்ளியில் நடைபெறும் சுதந்திர தினவிழாவில் உரையாற்றுவதற்காக விடுதலைப் போராட்ட வீரர்கள் பற்றிச் சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கச் சொல்லலாம்.

**கலந்துரையாடல்**

கதையை வாசித்துக் குழுக்களில் கலந்துரையாடி, இக்கதையிலிருந்து தெரிந்து கொண்டதென்ன என்பதைக் குறிப்பேட்டில் எழுதவேண்டும்

ஆசிரியர் மதிப்பீடு செய்யவும்.

மரங்கள் நடுவதற்கு என்னென்ன செய்வார்கள் என்பதைக் குழுக்களில் கலந் துரையாடட்டும்.

மரங்கள் நடுவதற்கான வாய்ப்புகள் எப்போதெல்லாம் கிடைக்கின்றன என்பதையும் அதற்கான விழாக்களையும் கூறுதல்.

**அழைப்பிதழ் தயாரித்தல்**

பசுமை மன்ற ஆண்டு விழாவிற்கான அழைப்பிதழ் தயாரிக்க வேண்டும். அழைப்பிதழில் என்னென்ன உட்படுத்த வேண்டும்? குழுக் கலந்துரையாட லின்போது ஆசிரியர் குழுக்களுக்கு உதவி செய்யவேண்டும். குழுக்கள் எழுதியதை வெளியிடட்டும். உங்கள் வகுப்பில் CWSN குழந்தைகள் இருந்தால் அவர்களையும் இந்த அழைப்பிதழ் தயாரிப்பில் சேர்த்துக் கொள்வீர்களல்லவா. (அவர்களுக்கு ஏற்றாற்போல் செயல்களை ஆசிரியர் அளிக்க வேண்டும்)



## மதிப்பீடு

மேம்படுத்தி எழுதிய அழைப்பிதழைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தரக்குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யலாம்

- கருத்து
- சொல்லாட்சி
- சுருங்கக் கூறல்

## மாதிரி அழைப்பிதழ்

### பசுமைமன்ற அழைப்பிதழ்

**இடம் : பள்ளி அரங்கம்**
**ஜூன்-5**

நமது பள்ளியில் ஜூன்-5 ஆம் நாள் சுற்றுப்புறச்சூழல் தினத்தைக் கொண்டாட உள்ளோம். அன்றைய தினம் பசுமைமன்றத் துவக்க விழாவைப் பள்ளியின் தலைமையாசிரியர் துவக்கி வைக்கிறார். அனைத்து மாணவ மாணவியர்களும் கலந்துகொண்டு இவ்விழாவினைச் சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்
**அமைப்பாளர்**
பள்ளிப் பசுமை மன்றம்

பள்ளி ஆண்டுவிழாவிற்கான அழைப்பிதழ் தயாரிக்குமாறு தொடர் செயல்பாடு கொடுக்கலாம்.

- ☐ பாடப் பகுதியில் காண்பிக்கப்பட்டுள்ள இலைகளைப்போல் வெட்டி எடுத்து இலைகளைச் செய்தித்தாளின் இடையில் வைத்து ஒரு வாரத்திற்குப் பின் அதனை எடுத்து வண்ணம் தீட்டலாம். புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாழை மரத்திற்கு ஏற்ற வண்ணம் தீட்டச் செய்யலாம்.
- ☐ **சொல் ஒன்று பொருள் இரண்டு**

  சொற்களின் பொருளை அறிந்து கொள்வதற்காகவும், ஒரு சொல் இடத்திற்கு ஏற்றாற்போல் பொருள் வேறுபாடு கொள்ளும் என்பதைச் சுட்டிக்காட்டவும் இச்செயல்பாடு அளிக்கப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் நோட்டு புத்தகத்தில் எழுதச் செய்யலாம்.

பள்ளிமாணவர்கள் வன அழகைக் காணக் களப்பயணம் செல்லத் தீர்மானித்தனர். இதனைக் கேட்டதும் அருணுக்குப் பாடல் எழுதத் தோன்றியது. அவன் எழுதிய பாடல் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. அவனுக்கு உதவி செய்து மீதிப் பகுதியை முழுமையாக்கச் செய்யுங்கள்.

**கவிதையை முழுமையாக்கல்**

கானகத்தில் சென்று நாம்
கருங்குயிலைக் காணலாம்
ஆட்டம் போடும் மயிலையே
அழகாக ரசிக்கலாம்



**மதிப்பீடு**

மாணவர்கள் சொந்தமாகப் பூர்த்தியாக்கிய கவிதை வரியை

- சொல்லழகு
- கற்பனைத் திறன்
- சொற்களின் கோவை

இவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யலாம்.

**மரத்தின் வளர்ச்சி பற்றி...**

பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கு கிடைத்த மரத்தின் வளர்ச்சிபற்றிக் கூறும் போது, வனத்துறையின் வாயிலாக மாணவர்களுக்குக் கிடைத்த மரத்தின் வளர்ச்சி பற்றியும், அதை எவ்வாறு பாதுகாக்கிறீர்கள் என்றும் உங்கள் வீட்டின் அருகில் நட்டுவைத்த மரம் வளர என்ன செய்தீர்கள் என்றும் தினசரிக் குறிப்பாக எழுதச் சொல்லலாம்.

**இலக்கணப் பகுதி**

இலக்கண முறைப்படி தவறில்லாமல் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை என்றும், இலக்கண முறையில்லாமல் பேசுவதை வழு என்றும் கூறுவார்கள். ஏதேனும் ஒரு காரணம் பற்றி ஏற்பட்ட தவறுகளை ஏற்றுக் கொள்வதை வழுவமைதி என்கிறோம். இவ்விலக்கணப் பகுதி பாடப்பகுதியில் கொடுக் கப்பட்டுள்ளது. இவற்றையும் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் பயிற்சிகள் கொடுக்கலாம்.

**நான் கற்றுக்கொண்டவை**

பாடப்பகுதியின் இறுதியில் மாணவர்கள் தங்களைச் சுயமாக மதிப்பிடும் வண்ணம் **நான் கற்றுக்கொண்டவை** என்ற பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் ஆசிரியர் உதவியுடன் சுயமாகப் பூர்த்தியாக்க வேண்டும்.

**படைப்புத் தொகுப்பு**

- சுவரொட்டி, முத்திரை வாக்கியம், துண்டுப் பிரசுரம் தயாரித்தல்
- சொற்பொழிவுக் குறிப்பு தயாரித்தல்
- அழைப்பிதழ் தயாரித்தல்
- வண்ணம் தீட்டுதல்
- கவிதைத் தொகுப்பு

இப்படைப்புத் தொகுப்புகள் உருவாக்க ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துதல் வேண்டும். எல்லா அலகுகளுக்கும் படைப்புத்தொகுப்பு உருவாக்க வேண்டும்.

## அலகு மதிப்பீடு (மாதிரி)

1. உலக வன நாளை முன்னிட்டு வனத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பள்ளியில் வனவிழா நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ் விழாவில் உரையாற்றுவதற்காகச் சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.

2. பள்ளியில் நடக்கும் வனவிழாவுக்கான அழைப்பிதழை மாணவர்களே தயாரிக்கத் தீர்மானித்தனர். அவர்களுக்கு உதவும் வகையில் நீங்களும் அழைப்பிதழ் தயாரிக்கவும்.

3. வனவிழா நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் பங்கெடுத்துச் சிறப் பிக்க உள்ளார். ஆகவே மாணவர்கள் பள்ளியின் சுற்றுப்புறத்தைத் தூய்மை யாக்கத் தீர்மானித்தனர். தூய்மை செய்த பின்னர்ச் சுற்றுப்புறத்தைத் தூய்மை யாக வைக்க வேண்டியதன் தேவையை மாணவர்களுக்கு உணர்த்து வதற்காகப் பள்ளியில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்டது போன்று நாமும் துண்டுப் பிரசுரம் எழுதி வெளியிடலாமே?

4. வனவிழா நிகழ்ச்சியின் பகுதியாகப் பள்ளியின் சுற்றுப்புற மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பேரணி நடத்த மாணவர்கள் தீர்மானித்தனர். பேரணியில் கொண்டுசெல்வதற்காக முத்திரை வாக்கியங்கள் உருவாக்கும் வேலை அருணுக்கும், அக்ஷயாவிற்கும் அளிக்கப்பட்டது. அவர்களுக்கு உதவுவதற்காக முத்திரை வாக்கியங்கள் தயாரிப்போம்.

5. வனவிழாவில் மாலதி சொந்தமாக எழுதி வாசித்த கவிதையின் சில வரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மீதிக் கவிதையைப் பூர்த்தியாக்குங்கள்.

    மரங்கள் இயற்கையின் வரமாகும்

    அது தரும் சுகங்கள் பலவாகும்

    .............................................................................

    .............................................................................

    .............................................................................

    .............................................................................